بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 20/11/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

## ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹாரிஸ் பின் ரிஃபாஆ (ரலி), ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔ بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝١ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝٢ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝٣ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝٥ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝٦ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

**ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹாரிஸ் பின் ரிஃபாஆ என்ற பெயருடைய சஹாபியின் நற்குறிப்பு இன்று முதலில் எடுத்துரைக்கப்படும்.** அறிவிப்புகளில் அன்னாரின் பெயர் அவ்ஃப் பின் அஃப்ரா என்றும் அவ்ஃப் பின் ஹாரிஸ் என்றும் அவ்ஸ் பின் அஃப்ரா என்றும் கூறப்பட்டுள்ளது. அன்னார் அன்ஸாரின் கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் முஆஸ் மற்றும் ஹஸ்ரத் முஅவ்விஸ் இருவரும் ஹஸ்ரத் அவ்ஃப் அவர்களின் சகோதரர்களாக இருந்தார்கள். **ஹஸ்ரத் அவ்ஃப் (ரலி) அவர்கள் மக்காவில் வந்து முதலில் பைஅத் செய்த ஆறு அன்ஸாரில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் பைஅத்தே அகபாவிலும் பங்கு பெற்றிருந்தார்கள்.** அன்னார் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டபோது ஹஸ்ரத் அஸ்அத் பின் ஸுராரா மற்றும் ஹஸ்ரத் அம்மாரா பின் ஹஸம் ஆகியோருடன் இணைந்து பனூ மாலிக் பின் நஜ்ஜாரின் சிலையை உடைத்தார்கள்.

**பத்ர் போர் நாளன்று போர் நடந்து கொண்டிருக்கும் போது, ஹஸ்ரத் அவ்ஃப் பின் ஹாரிஸ் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தனது அடியாரின் எந்த விஷயத்தில் மிக அதிகமாக மகிழ்ச்சி அடைகின்றான் என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அடியானின் கரங்கள் போரில் மும்முரமாக இருக்கும்போது அவன் எவ்வித கவசமின்றியும், அச்சமின்றியும் போரிட்டுக் கொண்டிருக்கும் போது என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அவ்ஃப் பின் அஃப்ரா (ரலி) அவர்கள் தனது கவசத்தை கழற்றி விட்டார்கள். மேலும் முன்னோக்கி சென்று போரிட தொடங்கினார்கள். எந்த அளவுக்கு என்றால் ஷஹீதாகி விட்டார்கள்.**

ஹதீஸ் மற்றும் வாழ்க்கை வரலாற்று புத்தகங்களில் **பத்ர் யுத்தத்தின்போது அபூஜஹ்லின் மீது தாக்குதல் நடத்திய சஹாபாக்களுடைய பெயர்களும் கிடைக்கின்றன. அவர்களில் ஹஸ்ரத் அவ்ஃப் பின் அஃப்ரா அவர்களின் பெயரும் இடம் பெற்றுள்ளது.**

**அடுத்து இடம்பெற இருக்கும் சஹாபியின் பெயர் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) ஆகும்.** ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் தொடர்பு அன்ஸாரின் கஸ்ரஜ் கோத்திரத்தின் கிளை கோத்திரமான பனூ நஜ்ஜாரைச் சார்ந்ததாக இருந்தது. **ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களுக்கு பைஅத்தே அகபா ஸானியா சந்தர்ப்பத்தில் 70 அன்ஸாருடன் பைஅத் செய்யும் நற்பாக்கியம் கிடைத்திருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்து மதீனாவிற்கு வருகை தந்தபோது அன்னார் மஸ்ஜிது நபவி மற்றும் தனது வீட்டிற்கான கட்டட பணி முடியும் வரை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்களின் வீட்டிலேயே தங்கியிருந்தார்கள்.**

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்லூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வீட்டில் தங்க வேண்டும் என ஒவ்வொருவரும் விரும்பினார்கள். எந்தெந்த வீதிகளிலெல்லாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒட்டகம் கடந்து சென்றதோ அந்த வீதியின் குடும்பத்தைச் சார்ந்த நபர்கள் தனது வீடுகளுக்கு முன்னால் நின்று கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை வரவேற்றார்கள். மேலும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது எம்முடைய வீடாகும். இது எம்முடைய செல்வமாகும். இது எம்முடைய உயிராகும். உங்களுக்கு தொண்டாற்றுவதற்காக ஆயத்தமாக உள்ளது என்றார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் உங்களை பாதுகாக்க தகுதியானவர்களாக இருக்கின்றோம். தாங்கள் எங்களிடத்தில் தங்கி விடுங்கள் என்று கூறினார்கள். சில மக்கள் உணர்வில் இன்னும் முன்னேறினார்கள். அன்னாரின் ஒட்டகத்தின் கடிவாளத்தை பிடித்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தனது வீட்டில் இறக்கி விட வேண்டுமென்று அவர்கள் விரும்பினர். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது ஒட்டகத்தை விட்டு விடுங்கள். இது இன்று அல்லாஹ்வால் நியமிக்கப்பட்டுள்ளது. இறைவனுடைய விருப்பம் எங்கு இருக்குமோ அங்கேயே இது நிற்கும் என்று ஒவ்வொரு நபரிடமும் பதிலளித்தார்கள்.

இறுதியில் மதீனாவின் ஒரு ஓரத்தில் பனூ நஜ்ஜாரைச் சார்ந்த அனாதைகளுக்குரிய ஒரு நிலத்திற்கு அருகில் சென்று ஒட்டகம் நின்றுவிட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நிலத்தில் நபவீ பள்ளிவாசலையும், தம்முடைய வீட்டையும் கட்ட தீர்மானித்தார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இங்கு மிக அருகில் யாருடைய வீடு உள்ளது என்று கேட்டார்கள். அப்போது அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் முன்னால் வந்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எனது வீடுதான் மிக அருகில் உள்ளது என்று கூறினார்கள். மேலும் உங்களுக்காக அது சமர்ப்பிக்கப்படுகிறது என்றும் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களது வீட்டிற்கு செல்லுங்கள். நமக்காக ஏதாவதொரு அறையை ஆயத்தம் செய்யுங்கள் என்று கூறினார்கள். அபூ அய்யூப் அவர்களின் வீடு இரண்டு அடுக்கு கொண்டதாக இருந்தது. அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக மேல் தளத்தை ஒதுக்கினார்கள். ஆனால் தன்னை சந்திக்க வருபவர்களுக்கு கஷ்டம் ஏற்படும் என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் தளத்தையே தேர்ந்தெடுத்தார்கள். அன்ஸாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஏற்பட்டிருந்த அதிகமான நேசம் இந்த சந்தர்ப்பத்தில் வெளிப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் காரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் தளத்தில் தங்குவதை ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தாலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கீழ் தளத்தில் உறங்குகின்றார்கள். ஆனால் நாமோ மேல் தளத்தில் இருக்கின்றோம். இது மரியாதைக் குறைவான செயலாக ஆகிவிடும் என்ற எண்ணத்தில் முழு இரவும் கணவரும் மனைவியும் கண் விழித்துக் கொண்டிருந்தார்கள். இது அன்பின் ஒரு வெளிப்பாடாகும். இரவில் ஒரு பாத்திரத்தில் இருந்து தண்ணீர் கொட்டி விட்டது. கீழ் தளத்தில் தண்ணீர் வடிந்து விடக்கூடாது என்ற எண்ணத்தில் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் ஓடிச் சென்று தனது போர்வையை தண்ணீரில் நனைத்து அதன் ஈரப்பதத்தை உலரச் செய்து விட்டார்கள். காலைப்பொழுதில் அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். அனைத்து நிலைமைகளையும் எடுத்துரைத்தார்கள். அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மேல் தளத்திற்கு செல்வதற்கு சம்மதித்து விட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் தினமும் உணவை ஆயத்தப்படுத்தி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து எஞ்சிய உணவு திரும்பும்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்கிருந்து எடுத்து உண்டார்களோ அங்கிருந்து எடுத்து உண்பார்கள்.

அன்னார் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக உணவு ஆயத்தம் செய்தார்கள். அதில் பூண்டு இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த உணவை உண்ணவில்லை. இதைக்கண்டு அன்னார் பதற்றமடைந்தார்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்திக்க மேலே சென்றார்கள். இந்த பூண்டு ஹராமா? என்று அன்னார் வினவினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இல்லை! ஆனால் நான் அதனை விரும்பவில்லை என்று கூறினார்கள். அப்போது **எதனை நீங்கள் விரும்பவில்லையோ அதனை நானும் விரும்பவில்லை என்று அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் கூறினார்கள்.**

முஸ்னத் அஹ்மது பின் ஹம்பலின் இன்னொரு அறிவிப்பில், பூண்டிற்கு பதிலாக வெங்காயம் என்று கூறப்பட்டுள்ளது. 'என்னிடத்தில் வருகின்ற அந்த வானவரின் காரணமாக நான் அதை உண்ண விரும்பவில்லை. ஆயினும் நீங்கள் அதனை உண்ணுங்கள்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் பங்கு பெறும் நற்பாக்கியத்தைப் பெற்றுள்ளார்கள்.**

ஒரு முறை ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரத்திற்கு வெளியே வாளை ஏந்திக் கொண்டு இரவு முழுவதும் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இவ்விஷயம் தெரிய வந்த போது, اللّٰهُمَّ اِحْفَظْ اَبَا اَيُّوبَ كَمَا بَاتَ يَحْفَظُنِى **அல்லாஹ்வே! அபூ அய்யூப் எனது பாதுகாப்பிற்காக முழு இரவையும் கழித்தது போன்று நீ அவரை பாதுகாப்பாயாக என்று துஆ செய்தார்கள்.**

ஹஸ்ரத் சயீத் பின் முஸய்யிப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய முடியில் குச்சி போன்ற ஏதோ ஒன்றை கண்டார்கள். அதனை அதிலிருந்து எடுத்து விட்டார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ் வெறுக்கின்ற விஷயத்தை அபூ அய்யூபிடமிருந்து அகற்றி விடட்டுமாக. உமக்கு துன்பம் ஏற்படாமல் இருக்கட்டுமாக என்று கூறினார்கள்.

ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. **அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். அதாவது, எவர் தாய்க்கும் மகனுக்கும் இடையில் பிரிவை ஏற்படுத்தினாரோ அல்லாஹ் அவருக்கும் அவருடைய அன்பர்களுக்குமிடையில் கியாமத் நாளன்று பிரிவை ஏற்படுத்தி விடுவான்.**

ஹஸ்ரத் மர்ஸத் பின் அப்துல்லாஹ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி அவர்கள் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். மக்ரிப் தொழுகையில் தாமதிக்காதவரை எனது சமுதாயத்திடம் நன்மை எஞ்சியிருக்கும். அல்லது எனது சமுதாயம் தனது இயல்பில் நிலைநிற்கும்.

அபூ வாஸில் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரியை சந்தித்தேன். அன்னார் என்னுடன் கை குலுக்கினார்கள். எனது நகம் மிகவும் நீளமாக இருப்பதைக் கண்டார்கள். அப்போது அன்னார், **உங்களில் ஒருவர் விண்ணின் செய்திகள் பற்றி கேள்வி கேட்கின்றார். மேலும் அவர் தனது நகங்களை பறவைகளின் நகங்களைப்போன்று நீளமாக்கிக் கொள்கின்றார். அதில் அசுத்தமும், அழுக்குகளும் ஒன்றுகூடி விடுகின்றன. எனவே நகங்களை வெட்டி வைப்பீர்களாக என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்** என்று என்னிடம் கூறினார்கள்.

**ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களின் சிறப்பும் மேன்மையும் எந்த அளவுக்கு ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால், சஹாபாக்களே அவர்களிடம் விவகாரங்களைப் பற்றி**

**கேட்டறிந்து கொள்வார்கள்.** அவர்களது மரணம் நெருங்கியபோது அவர்கள் மக்களிடம், நான் உங்களிடம் ஒரு ஹதீஸை அறிவிப்பேன். நான் அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து கேட்டுள்ளேன். எனது மரணம் அருகில் இல்லாமல் இருந்திப்பின் நான் அதனை கூறியிருக்க மாட்டேன். எவர் அல்லாஹ்விற்கு எதனையும் இணையாக்காத நிலையில் மரணிப்பாரோ அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விட்டார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் பத்ர் போரில் பங்கு பெற்றார்கள். முஸ்லிம்களின் எந்தவொரு போரிலிருந்தும் அன்னார் பின்தங்கி இருக்கவில்லை. ஒரே நேரத்தில் இரண்டு போர்கள் நடந்து கொண்டிருந்தால் ஏதாவதொரு போரில் அன்னார் நிச்சயம் பங்கு பெற்றிருப்பார்கள். ஒரு போரில் ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்கள் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். படையில் யஸீத் பின் முஆவிய்யா அவர்கள் அமீராக இருந்தார்கள். அன்னாரை நலம் விசாரிப்பதற்காக அன்னாரிடத்தில் வந்தார்கள். உங்களுக்கு ஏதும் தேவை இருந்தால் கூறுங்கள் என்று கூறினார்கள். அப்போது அன்னார் கூறினார்கள்; எனது தேவை என்னவென்றால், நான் மரணித்து விட்டால் என்னை எடுத்துச் செல்லுங்கள். எதிரியின் நாட்டில் எந்த அளவுக்கு கொண்டு செல்ல முடியுமோ கொண்டு செல்லுங்கள். மேலும் அங்கேயே என்னை அடக்கம் செய்து விட்டு திரும்பி வந்து விடுங்கள்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அவர் அன்னாரை எடுத்துச் சென்றார். வாய்ப்பிருந்தவரை எதிரியின் நாட்டுக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். மேலும் அவரை அங்கு அடக்கம் செய்து விட்டு திரும்பி வந்து விட்டார்.

ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு தனது மரணம் வரை ஜிஹாதுடன் ஒன்றியிருந்தார்கள். ஒரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது; ஹிஜ்ரி 52 ஆம் ஆண்டில் நடைபெற்ற கான்ஸ்டண்டினோபில் நடைபெற்ற போரில் அன்னார் மரணமடைந்தார்கள். யஸீத் பின் முஆவிய்யா அவர்கள் அன்னாருடைய ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் அபூ அய்யூப் அன்ஸாரி (ரலி) அவர்களின் கல்லறை துருக்கியில் இஸ்தான்புல் நகரில் உள்ளது. துருக்கி மக்களில் பெரும்பாலார் மன அமைதிக்காக இங்கு வந்து செல்வார்கள்.

இத்துடன் பத்ர் போர் சஹாபாக்களின் நற்குறிப்பு நிறைவடைகிறது. ஆனால் நான்கு கலீஃபாக்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன் இன்ஷா அல்லாஹ். அதேபோன்று துவக்கத்தில் சில சஹாபாக்களின் சுருக்கமான நற்குறிப்பு கூறப்பட்டது. அவர்களைக் குறித்து மேற்கொண்டு ஏதேனும் விஷயங்கள் கிடைத்தால் அதையும் எடுத்துரைப்பேன்.

*இறுதியில் ஹுஸூர் அவர்கள் கடந்த நாட்களில் வஃபாத்தான இந்தியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய முஅல்லிம் அப்துல் ஹய் மண்டல் சாஹிப் மற்றும் முஅல்லிம் மதிப்பிற்குரிய சிராஜுல் இஸ்லாம் சாஹிப் ஆகியோரைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள்.*

*அவ்வாறே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகள் வழிப் பேரரும், மதிப்பிற்குரிய நவாப் அமத்துல் ஹபீஸ் பேகம் சாஹிபா (ரலி) அவர்களின் மகனுமாகிய மதிப்பிற்குரிய ஷாஹிது அஹ்மது கான் பாஷா சாஹிப் மற்றும் யூ கே -வைச் சார்ந்த மதிப்பிற்குரிய செய்யது மஸ்ஊது அஹ்மது ஷா சாஹிப் ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துக் கூறினார்கள். மேலும் தொழுகைக்குப் பிறகு இவர்களது ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாகவும் கூறினார்கள்.*

*(தமிழாக்கம்: மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்)*